Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 276 / 2025

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | வெங்கடேசன் | Calling: | ஆசிரியர் |
| Father's / Husband's Name: | விஸ்வநாதன் | Religion: | |
| Village: | அழிஞ்சிகுளம் | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 22.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா.3 முதன்மை விசாரணை

நான் அழிஞ்சிகுளம் கிராமத்தல் வசித்து ஆசிரியராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது பெற்றோர் ஆவார். கடந்த 03.09.2024 ம் தேதி நான் எனது பள்ளியில் பணியில் இருந்தபோது அ.சா.1 எனது அம்மா எனக்கு போன் செய்து எனது அப்பாவிற்கு சாலை விபத்து ஏற்பட்டு வாணியம்பாடியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து மாலை 06.00 மணிக்கு நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். என் தந்தைக்கு இடது காலில் எலும்பு முறிவு காயம் ஏற்பட்டிருந்தது. விபத்து சம்மந்தமாக நான் விவரம் கேட்டு தெரிந்து கொண்டேன். எனது அப்பா டிவிஎஸ் எக்ஸ் எல் இருசக்கர வாகனத்தை ஓட்ட எனது அம்மா பின்னால் அமர்ந்து கொண்டு சென்றபோது தும்பேரி கூட்ரோடு என்ற இடத்தில் நான்கு சக்கர வாகனமான பால் வண்டி ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தனர்.

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

**சாட்சி கையொப்பம்**

**(ஒம்.) வெங்கடேசன்**

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 276 / 2025

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | விஸ்வநாதன் | Calling: | விவசாயம் |
| Father's / Husband's Name: | பெரியவன் | Religion: | |
| Village: | அழிஞ்சிகுளம் | Age: | 75 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 22.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா.2 முதன்மை விசாரணை

நான் அழிஞ்சிகுளம் கிராமத்தல் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் தான் சம்பவத்தின்போது செல்போனில் பேசிக்கொண்டே வந்து மோதினார். தூக்கி விடுங்கள் என்று சொல்லியும் அவர் தூக்கவில்லை. கடந்த 03.09.2024ம் தேதி விபத்து நடந்தது. நானும் என் மனைவியும் அழிஞ்சிகுப்பத்திலிருந்து தும்பேரி கூட்ரோட்டில் சென்றுகொண்டிருந்தோம். ஜோலார்பேட்டை செல்வதற்காக மனைவியை பஸ் ஏற்றி விடுவதற்காக டிவிஎஸ் எக்ஸ் எல் டி எண் 4196 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். நான் வண்டியை ஓட்ட என் மனைவி பின்னால் அமர்ந்து கொண்டிருந்தார். விபத்தானது தும்பேரி கூட்ரோட்டிடம் ஏற்பட்டது. எங்களுக்கு பின்னால் வந்த 4 சக்கர வாகனம் மோதியது. அந்த விபத்தில் எனக்கு இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு ராடு வைக்கப்பட்டுள்ளது. **(சாட்சி இதை கூறும்போது தனது இடது காலில் உள்ள காயத்தை காட்டியும், வளைந்திருந்ததை காண்பித்து**

**கூறினார்.)** பின் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்றோம். பிறகு மேல் சிகிச்சைக்காக என்னை வெளியூர் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். வெளியில் சென்று சிகிச்சை பெறுவதற்கு போதிய வசதி இல்லாமல் இருந்ததால் உள்ளூரிலியே உள்ள விஜயா தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) விஸ்வநாதன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 276 / 2025

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | காஞ்சனா | Calling: | கூலி |
| Father's / Husband's Name: | விஸ்வநாதன் | Religion: | |
| Village: | அழிஞ்சிகுளம் | Age: | 59 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 22.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

நான் அழிஞ்சிகுளம் கிராமத்தல் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 03.09.2024ம் தேதி நானும் என் கணவரும் ஜோலார்பேட்டையில் உள்ள எனது அம்மா வீட்டிற்கு அழிஞ்சிகுப்பத்திலிருந்து டிவிஎஸ் பைக்கில் என் கணவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்துகொண்டு சென்றோம். எங்களுக்கு பின்னால் வந்த பால் வண்டி போல் இருந்த டெம்போ ஒன்று எங்கள் வண்டியின் பின்னால் வந்து இடித்தது. விபத்தானது அழிஞ்சிகுப்பத்திலிருந்து தும்பேரிக்கு திரும்பும் ரோட்டில் நடந்தது. எங்கள் வண்டியின் பின்னால் வந்து இடித்த பால் வண்டி போல் இருந்த டெம்போவை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். அந்த விபத்தில் என் கணவருக்கு சோத்து காலில் அடிப்பட்டது. விபத்தில் எனக்கு உடம்பில் வலி ஏற்பட்டது. எனது கணவரின் காலில் மிகவும் அடிப்பட்டதால் சிகிச்சைக்காக முதலில் வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்றோம். பின் வேலூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். வெளியில்

சென்று சிகிச்சை பெறுவதற்கு போதிய வசதி இல்லாமல் இருந்ததால் உள்ளூரிலியே தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை நான் தான் கொடுத்தேன். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கபடுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) காஞ்சனா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K